ஸங்கீத வித்வத் சபையில் கூடியிருக்கும் வித்வான்கள், விதுஷிகள் அபிமானிகள் எல்லோருக்கும் என் நமஸ்காரம். இவ்வாண்டு ஸ்ரீசியாமா சாஸ்திரிகளின் நூற்றைம்பதாவது ஆண்டு விழாவில் கலந்து கொள்ளும்படி எனக்கு வாய்ப்பு அளித்ததற்கு சபையின் காரியதரிசிகளுக்கு எனது நன்றி. ஸ்ரீசியாமா சாஸ்திரிகளின் கொள்ளுப்பேரனான ஸ்ரீசியாமா சாஸ்திரிகள் எனது குரு. அவர் எனக்குச் சொல்லிக்கொடுத்த பாடாந்தரத்தில் உருப்படிகளில் காணப்படும் ராகஸ்வரூபங்களைப்பற்றி எனக்குத் தோன்றிய சில எண்ணங்களைச் சொல்ல முன்வந்துள்ளேன். உதாரணங்களைப் பாடியும் வீணையில் வாசித்தும் காண்பிக்கிறேன்.

ராகம் நமது ஸங்கீதத்தின் ஜீவன். ராகபாவம் பொருந்திய ஸங்கீதம் தான் ஸங்கீதம். அர்த்தபாவம் ராகபாவத்தில் மேன்மையடைகிறது. லய சம்பந்தத்தினால் ஏற்படும் வேலைப்பாடுகள் பிகுவுடன் ராக வடிவங்களில் அமையும் பொழுது, ஸங்கீதத்தின் ஸுகபாவம் பூர்த்தியடைகிறது. இந்தத்தத்துவங்களைத்தான் மஹான்களுடைய உருப்படிகளை ஆராயும் பொழுது நாம் உணர்கிறோம்.

ஒரு ராகத்தை ஆரம்பிக்கும் பொழுதே, இந்த ராகத்திற்கு இதுதான் ரூபமென்று தனித்து நிலைத்து இருக்கவேண்டும். ஸந்தேஹத்திற்கு இடம் கொடுக்காமல் இரண்டு ராகங்களுக்கு ஒரே ஒரு ஸ்வரம் வித்தியாசம் இருக்கலாம். இருந்தாலும் அந்த ஸ்வரத்தின் சேர்க்கை இல்லாமல் வரும் ஸஞ்சாரங்களில் கூட, ராகவடிவங்களிலுள்ள வித்தியாசம் மலைக்கும் மடுவிற்கும் உள்ளதுபோல் தோன்றும்.

சாஸ்திரிகள் மதுரை மீனாக்ஷியம்மன் பேரில் பாடிய நவரத்ன மாலிகை என்னும் ஒன்பது கிருதிகளில், சங்கராபரணம், காம்போதி கிருதிகளை எடுத்துக்கொள்வோம். இந்த கிருதிகளின் ஆரம்பத்தில் தாது, மாது, அதாவது ஸ்வரம், ஸாஹித்யம் இவ்விரண்டும் ஒன்றாகவே அமைந்துள்ளன. இருந்தாலும் ராகங்களின் பிரத்தியேக, வடிவங்களை எடுக்கும் பொழுதே நிலை நாட்டியுள்ளார் சாஸ்திரிகள்.

சங்கராபரணத்தில்:—

''; பா, ம மக கா மா; ப ம பா-தநி ஸா; ஸா
தே ....வீ மீ...... ன நே த்ரி

காம்போதியில்: —

; பா த ம மக கா ; பா த ப தா ஸா ப - ப த ஸா ;
தே.........வீ...... நீ...... ப த ஸா ''

சில பிரசித்தி பெற்ற ராகங்களில் சாஸ்திரிகள் கையாண்டிருக்கும் சில விசேஷ அம்சங்களைக் கூற விரும்புகிறேன்.

பைரவியில் சுத்த தைவதத்தை தீர்க்கமாகப் பிடித்து, ஜாருவுடன் பஞ்சமத்திற்கு வருவது ஓர் அழகான ஸஞ்சாரம். இதை சாஸ்திரிகளின் பிடி என்றே கூறலாம்.

''பா , , ப த ரி ஸ நீ நி தா, த பா, ;

சா ம் ப வீ .... (மஹாபைரவி சாம்பவி)

இந்தப்பிடியை ஸ்வரஜதியின் ஆரம்பத்தில் நாம் அனுபவிக்கிறோம். ராக வளர்ச்சியைப் பத்ததியான முறையில் கையாளும் வழிகளை இந்த ஸ்வர ஜதியின் அமைப்பில் அறிந்து கொள்கிறோம். '' ககனம் ககநாகாரம் ஸாகர : ஸாகரோபம : '' என்று கூறுவது போல் இந்த ஸ்வரஜதிக்கு ஈடு இந்த ஸ்வரஜதியே தான் என்று சொல்லலாம். யதுகுல காம்போதி ஸ்வரஜதியில் அடுக்கு அடுக்கான ஸ்வரப்பகுதிகள் மூலம் ராக வளர்ச்சி யைப் பார்க்கிறோம். இந்த ராகத்தில் தாரஸ்தாயி ஸஞ்சாரம் ரிஷபத் திற்குமேல் இருக்கக்கூடாதென்றும் அதிகமானல் காந்தாரத்தைச் சற்றே தொட்டுவரும் ஸஞ்சாரங்கள் தான் இருக்கக்கூடும் என்றும் கொள்கைகள் உண்டு. ஆனல் சாஸ்திரிகள் தைர்யமாக ம க ரி ஸ நிதப —ம க ரி ஸ நி த ப என்று தாரஸ்தாயி ஸஞ்சாரத்தை ஸ்வரஜதியின் கடைசி சரணத்தில் உணர்ச்சி வசத்துடன் அமைந்துள்ளார். Poetic license என்றும் சொல்லலாம்.

இந்த இரண்டு ஸ்தாயி ஸஞ்சாரத்தைத் தோடி ஸ்வரஜதியில் முதலி லேயே காண்பித்திருக்கிறர். ''ராவேஹிமகிரி'' என்று சொல்லும் பொழுது 'ம'வில் ஸ்வராக்ஷர அமைப்புடன் மந்த்ரஸ்தாயியில் மத்யமத் தில் வைத்து மேலே வினவிம்ம, சுபமிம்மா. மாயம்மா என்று வருகையில் மத்யஸ்தாயி மத்யமத்தில் ஸஞ்சாரம் செய்திருக்கிறர்.

கல்யாணி ராகத்தில் சாஸ்திரிகள் த்ரிச்ருதி ரிஷபத்திற்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளார். இந்த த்ரிச்ருதி ஸ்தானம் மனத்தில் பதிவதற்கு ஸங்கீத கலாநிதி ஸ்ரீ சபேசய்யர் ''நிஸாரீ—கஸரி—கரிககரீ— என்றும் பைரவி வர்ணத்தை பிடிலில் வாசிக்கும் பொழுது ரிஷபம்தான் தீர்க்கமாக இருக்கிறதே என்று, கீழே பஞ்சமத்துடன் சேர்த்து வில் போடக்கூடாது; பஞ்சமத்தோடு பஞ்சமமாக த்வனித்தால், இந்த ரிஷபம் சதுச்ருதியாக ஏறிவிடும்'' என்பார். இந்த த்ரிச்ருதி ரிஷபம் ஓர் ஆந்தோளித கமகத்துடன் வரும் வடிவமே தான் கல்யாணியில் காணப்படும் த்ரிச்ருதி ரிஷபம். சியாமா சாஸ்திரிகளின் கல்யாணி ராக கிருதிகள் பெரும்பாலும், இந்த ரிஷபத்தைச் சுற்றியே ஆரம்பிக்கின்றன:—

'' பிரானவர '' இதே மெட்டில் ஸம்ஸ்க்ருத மொழியில் ''ஹிமாத்ரி ஸுதே'' இன்னும் ''சங்கரி சங்கரி க்ருணகரி'' மற்றொரு கிருதி '' தேவி நன்னுப்ரோவ வம்மா''.

அடுத்தபடி பூர்விகல்யாணி ராகத்தில் அந்தர காந்தாரம் கார்வையோடு கூடியிருந்தபோதிலும் அது அசைவுடனே அமைந்துள்ளது.

'காமரி' என்று அசல ஸ்வரங்களாக இல்லாமல் அந்த காந்தாரம் மத்யமத்தை யொட்டியோ பஞ்சமத்திலிருந்தோ கமக ஸம்பந்த மாகவே காணப்படுகிறது. ''மரிதிக்கெ வருன்னரு'' 'ஜனனி நன்னு' என்று வரும் பொழுது இவ்வாறே தோன்றுகிறது.

இன்னும் ''ஸ த ஸா ரி ரி கக க காகமரீ கா
என் னே ரமும் உன் நா... மம்'' என்று

ரிஷபத்திற்கு மத்யமத்திலிருந்து ஜாருவை அமைத்து காந்தாரத்தை அசைவுடன் வரும் ஸஞ்சாரங்களைப் பார்க்கிறோம்.

சாஸ்திரிகளின் மிகப்பிரஸித்தமான ஆனந்தபைரவி, ஸாவேரி, தோடி, புன்னகவராளி, மாஞ்சி முதலிய க்ருதிகளை நான் எடுக்கப்போவதில்லை. ஆஹிரி ராகத்தில் ஓர் அம்சத்தை மட்டும் கூற விரும்புகிறேன். ஆஹிரி ராகத்தில் வளி என்ற கமகத்துடன் வரும் ஸஞ்சாரங்களில் நிஷாதம் கார்வையுடன் அமைந்து ஒரு சுழலுடனும் ஜாருவுடன் பஞ்சமத்திற்கு வரும். இது இந்த ராகத்திற்கு மிக அவசியம்.

'' நிஸ் நீதத—தநி தா, ப
மா ட்லா..... ட என்று

வரும் பொழுது இந்த வடிவத்தைக் காணலாம்.

மேலே ஷட்ஜத்திற்குப்போகும்பொழுது நிஷாதம் ஒரு தீர்க்க கமகத்துடன் அமைந்த போதிலும் திரும்பிவரும் பொழுது வளி கமகத் துடனே அமைந்திருக்கிறது, 'ந்யாயமா' என்னும் இடத்தில் தீர்க்க கமகத்துடன் நிஷாதம் தூக்கியிருந்தாலும் ''மீஞக்ஷம்மா'' என்று முதல் வரியில் தைவதத்திலிருந்து நிஷாதத்தை யொட்டியே கமகம் வருகிறது. இதே அமைப்பை சரணத்தில் 'காளிகாபவாநி' என்னும் இடத்திலும் காண்கிறோம்.

அடுத்த ராகம் கல்கடா. சமீபகாலத்தில் ராகங்களுக்கு ஆரோகணம் அவரோகணம் என்று வைக்கலாமா வேண்டாமா என்ற பிரச்சினை நிலவி வருகிறது. ஆனல் ''சுவரை வைத்துதான் சித்திரம் எழுதமுடியும்'' என்ற முறையில் நமது முன்னோர்கள் வருங்கால வித்வான்களுக்கும் வித்யார்த்தி களுக்கும் சாஸ்த்ரீய முறைகளை வகுத்துக் கொடுத்திருக்கிருர்கள். இது இல்லாவிடில், ஒரு Scientific approach என்று நாம் பின்பற்ற முடியாது. இந்த Music Academy இத் துறையில் ஒரு மகத்தான தொண்டு செய்திருக்கிறது.

மகான்களுடைய அபிப்பிராயங்களைச்சேர்த்து ராக லக்ஷ ணத்தை எழுதியிருக்கிருர்கள். இதை நாம் போற்ற வேண்டும். இந்த சம்பிரதாயத்தை யொட்டியே நான் ராகங்களைப் பற்றிச் சொல்லப் போகிறேன்.

கல்கடா ராக லக்ஷண சர்ச்சை முன்னர் இந்த வித்வத்சபையில் ஸங்கீதகலாநிதி பிடில் வித்வான் கரூர் சின்ன ஸ்வாமி அய்யர் அவர்கள் தலைமை தாங்கிய ஆண்டில் வெகு விரிவாக நடந்தது. ஸங்கீதகலாநிதி டி. எல். வேங்கடராம அய்யர் என்னை சாஸ்திரிகளின் உருப்படியைப் பாடச்சொல்லிக் குறிப்புகள் எடுத்துக்கொண்டார். அந்த ஆண்டு நட வடிக்கையில் இதைத் தெரிந்து கொள்ளலாம்.

''ஸங்கிரஹ சூடாமணி'' என்னும் கிரந்தத்தில் கல்கட 13வது மேளமான காயகப்ரியாவில் மத்யம வர்ஜமான ஷாடவ ஷாடவ ராக மென்றும், காந்தார வர்ஜமான ஷாடவ-ஷாடவம் கலகண்டி ராக மென்றும் கூறப்பட்டுள்ளது. ஆனல் அந்த நூலில் இருக்கும் லக்ஷண கீதத்தில் கல்கடாவில் ஒரு ஸஞ்சாரம் ''ப க க - ப த நி த - ஸ ரி கா ரி'' இதைக் கையாளும் பொழுது ''த நி ஸ'' வருவதாக இல்லை. இதை ஏன் சொல்கிறேன் என்ருல் சாஸ்திரிகளின் ''பார் வதி நினு'' கிருதி யிலும் த்யாகராஜரின் 'ஸமயமு' என்ற கிருதியிலும் கல்கட ஔடவ ஷாடவமாகவே காணப்படுகிறது. அதாவது ஸரிகபதஸ-ஸநீதப மகரிஸ ஆரோகணத்தில் மத்யம, நிஷாதங்கள் வர்ஜம்-சுந்த நிஷாத ப்ரயோகங்

களுக்கு இது மிகவும் ஏதுவானது. ஆரோகணத்தில் நிஷாதம் வர்ஜம் என்பதை ஊர்ஜிதப்படுத்துவதற்கே சாஸ்திரிகள் ஸ்வர ஸாஹித்யத்தை ஒரு trump card போல் வைத்து அனுபல்லவியில் "கீர்வாண வந்தித பதஸா ரஸ" என்று நிரூபித்திருக்கிறார்.

கல்கடாவில் நிஷாதம் பஞ்சமச் சேர்க்கையுடன் வரும்பொழுது

பா-பத நிதபா

பார்வதி நின்னே என்று கமகத்துடன் ஹ்ரஸ்வமாகவும் ஷட்ஜத்தை யொட்டி வரும் பொழுது அசைவற்று தீர்க்கமாகவும் அமைகிறது. இந்த நிஷாதத்தை சாஸ்திரீய முறையில் ஆராயும் பொழுது ஒரு விசேஷ அம்சம் தெளிவாகிறது.

தார ஷட்ஜத்திலிருந்து ஜாருவுடன் இறங்கும் சுத்த நிஷாதமும் (ஸ்நீ) பஞ்சமத்திலிருந்து இறங்கும் அந்தர காந்தாரமும் (பகா) ஸம இடை வெளியில் உள்ளன. அதாவது சாதாரண காந்தாரம் ($\frac{6}{5}$ frequency) இடை வெளி. இதே 'கரீ' என்றும் மூன்று விதமாக அமையும் படி சாஸ்திரிகளின் உருப்படியில் பார்க்கிறோம். "பண்ட தைத்ய கண்டலா"........என்னும் இடங்களில் இணையான ஸஞ்சாரங்களினால் இந்த ராகம் சிறப்புடன் காணப்படுகிறது. இன்னும் சுத்தமாக சுத்த நிஷாதத்தை

ஸ்நீத பகாக

என்னும் இடத்திலும் நீநிதா

மார்த்தாண்ட நீரஜா க்ஷி என்னும்

இடத்திலும் அழகாக அமைத்திருக்கிறார்.

கல்கடா ராகத்தை யொட்டி கோபால கிருஷ்ண பாரதியாரின் நந்தன் சரித்திரத்தில் துக்கடா என்னும் தலைப்பில்—" நந்தனாரும் வந்தார் வெகு சொந்தமாகவே"—என்று ஒருபாட்டு.

இதில் அங்க முழுதும் நீறு பூசிய

கா ப த ஸா ஸ நீ நீ தா த பா என்னும்

இடத்தில் தீர்க்கமாக சுத்த நிஷாதம் வருகிறது.

ஒரு முறை ஆகாசவாணியில் ராக விளக்கம் என்னும் தலைப்பில் கல்கடா ராகத்தை நான் விளக்கிச் சொல்வதற்கு முன் ஸங்கீத கலாநிதி ஸ்ரீ முடிகொண்டான் வெங்கடராம அய்யர் அவர்களைச் சந்தித்து தியாகராஜரின் கல்கடா உருப்படியிலுள்ள சில விஷயங்களைத் தெரிந்து

கொண்டேன். அவர் கடைசியில் கூறியது. ''கோபாலக்ருஷ்ண பாரதியாரின் துக்கடாவும் சியாமா சாஸ்த்ரிகளின் கல்கடாவும் ஒரே அச்சுதான், ஆனால் தியாகராஜரின் உருப்படியில் ராகஸ்வரூபம் சற்று வேறுபாடாகத் தோன்றுகிறது. ஜண்டஸ்வரப்ரயோகம் அதிகமாக இருப்பதால் அப்படி இருக்கக்கூடும்''.

அடுத்தது சிந்தாமணி ராகம். சாஸ்த்ரிகள் சிந்தாமணி க்ருதியை இயற்றிய சந்தர்ப்பம் அவர் வாழ்க்கையில் ஒரு முக்கிய தினம். ஒரு சமயம் பொப்பிலி கேசவய்யா தஞ்சாவூர் ஸம்ஸ்தானத்திற்கு ஸங்கீத வித்வான்களைச் சந்திக்க வந்தபொழுது அவருடன் போட்டியிட சியாமா சாஸ்திரிகளை வரும்படி அரண்மனையிலிருந்து உத்தரவு வந்தது.

ராஜாங்கத்திற்கோ பிரபுக்களுக்கோ ஸங்கீதத்தைப் பயன் படுத்த அவர் மனம் ஒப்பவில்லை. இருந்தாலும் ஸம்ஸ்தானத்தின் மானத்தைக் காக்கும் பொறுப்பையல்லவா ஏற்றுக்கொள்ளும்படி உத்தரவு வந்தது? சாஸ்திரிகள் மனக்குழப்ப மடைந்து தமது இஷ்டதைவமான பங்காரு காமாக்ஷியின் ஸந்நிதியை அணுகி ''தேவி ப்ரோவ ஸமயமிதே'' என்று சரணகதியடைந்தார். "ரேபுமாபனி ஜெப்பிதே நேவினனு இகதாளனு ஈப்ரொத்து தயஜூபவே" என்று ''நாளைக்கு அபயம் கொடுப்பேன் என்றால் நான் கேட்கமாட்டேன்; இனிப்பொறுக்க மாட்டேன்; இன்றே கருணைபுரிவாய்'' என்று மனம்விட்டு முறையிட்டார். இந்தக்ருதியில் காணப்படும் வக்ரப் பிரயோகங்களும் தாட்டு ஸ்வரபிரயோகங்களும் பக்தரான சாஸ்திரியின் மன நிலையை பிரதிபலிக்கின்றன.

சிந்தாமணி ராகம் 56வது மேளமான ஷண்முகப்பிரியாவில் ஜன்யம். ஷண்முகப்பிரியாவில் அய்யர்வாள் க்ருதி ''வத்தனே வாரு''. தீக்ஷிதர் சாமரம் என்ற பெயருடன் சில வர்ஜ்ய ஸஞ்சாரங்களுடன் இந்த ராகத்தைக் கையாண்டிருக்கிறார்.

ஷண்முகப்ரியா ராகமே பிற்காலத்து வாக்கேயகாரர்களாகிய பட்டணம் சுப்ரமணிய அய்யர், முத்தய்யா பாகவதர். பாபநாசம் சிவன் இவர்களால் பிரஸித்தி யடைந்த ராகம். சமீபகாலமாக இந்த ராகம்-ராகம்-தானம்-பல்லவி என்னும் கட்டத்திற்கு எடுத்துக்கொள்ளும் அளவிற்கு பிராபல்யம் அடைந்திருக்கிறது. ஷண்முகப்பிரியாவின் ஜன்யங்களாகிய வஸுகரீ, பாஷிணீ முதலிய ராகங்களின் ஆரோகணம் காந்தார வர்ஜ்யமாக் கூறப்பட்டிருக்கிறது. இந்தக் கூட்டத்தைச் சேர்ந்த சிந்தாமணியையும் இந்த விதி பாதிக்குமல்லவா? ஆரோகண அவரோகணம். ஸ ரி ஸ - ப ம ப த நி ஸ் - ஸ நி த ப - ம ம ரி க ஸ ரி க ம ப'' வத்தாலும் ஸ ரி ஸ - ப ம பா என்று வைத்துக்கொள்வதே உசிதம்.

ஏன்? நாம் ஸாரங்கா ராகத்தின் ஆரோகணத்தையும் இவ்வாறுகையாளு கிறோம். சிந்தாமணியில் தாட்டு ஸ்வர பிரயோகங்கள் விசேஷம்

ரிப மப ரிகஸா

லோ க ஜனனி ... ... தயலேதா ரீஸ என்னும்

வரும் இடங்களில் சாதாரண காந்தாரத்திலிருந்து ஷட்ஜம் இறங்க வேண்டும்.

அதாவது ரீஸ—என்று சொல்லும் பொழுது ரீ, க ஸ என்றே அமைப்பில் வருகிறது. ஸ்வரத்தை உச்சரிக்கும் பொழுது "காரீஸா" என்று சொன்னாலும் அந்த ரிஷபத்தின் அனுஸ்வரத்தை கவனிக்க வேண்டும். அந்த அனுஸ்வரமான காந்தாரம் ஷட்ஜத்தை ஒட்டியே வரும். இந்த பி ர யோ க த் தை கிருதியின் ஆரம்பத்திலேயே

காரீ ஸாஸ

தேவீ ப்ரோவ வில் பார்க்கிறோம். ரிஷபம் தீர்க்கமாக வந்தும் காந் தாரத்தைத் தொடாமல் ரி நிஸா என்றுவரும்:—

நா-பை-த ய லே தா—; நீ தாஸ-டகாதா—என்ற இடங்களில் இதைக் கவனிக்கலாம்.

சிந்தாமணி ராகத்தில் சதுச்ருதி தைவதம் வரலாமா என்ற பிரச் சனைக்கு என் குரு "இது சாரீர வசதிக் குறைவின் கோளாறினுல் ஏற் பட்ட விளைவு" என்று கூறினர். அதாவது இயற்கையாக சாரீரத்தின் இயல்பு ஆரோகணத்தில் ஸ்வரங்களின் ஸ்தானங்கள் சற்றுக் கூடுதலா கவே ஏற்படும். ஆகவே கொஞ்சம் கட்டுப்பாட்டுடன், நாம் ஸ்வரங்களை அண்டி அவற்றின் ஸ்தானங்களை ஸ்திரப்படுத்திக்கொள்ள வேண்டும். நாம் பிரசாரத்தில் பார்க்கிறோம். ஷண்முகப்பிரியாவில் "வள்ளி நாயகனே" "ஆண்டவனே," "மரிவேரே" என்று பதநிஸ ரீக்ரி— என்று வரும் இடங்களில் சதுச்ருதி தைவதத்துடன் அமைந்து வரு வதைக் கேட்கிறோம். பைரவியில் பிரதி மத்யமம் போல் ஷண்முகப்ரியா தோற்ற மளிக்கிறது. இப்படியல்லாமல் 'பதநித' என்று சுத்த தைவதத்தில் ஸ்திரப்படுத்தி நிஷாதத்தை பிடித்தால் தைவதம் தூக்காமல்வரும். இவ்வாறேதான் சிந்தாமணி கிருதியிலும் ஏற்படு கிறது. ஆகவே ப ம பா த நீ - தாநிஸாஸ்.

ப்ரிய பாம யை யு ன் ன தி என்று சுத்த தைவதத்தைக் கவனித்து வரவேண்டும். சிலர் இந்தக் க்ருதியை சுத்த நிஷாதம், சுத்த மத்யமம்

அந்தர காந்தாரம் இவற்றை அமைத்துப் பாடுகிறார்கள். அதிலும் மத்யமச்ருதியை வைத்துக்கொண்டு இந்த பாடாந்தரத்தைக் கேட்கும் பொழுது ஏதோ light music composition போலத் தோன்றுகிறது. இது சம்பிரதாயத்திற்கு விரோதம். சிந்தாமணி ராகத்திற்கு சாஸ்திரிகள் கிருதிதான் அத்தாட்சி யென்று கூறும்பொழுது இந்த கிருதியின் ஸ்வரூபத்தை மாற்றி பிரபலமாக இருக்கும் பாடாந்தரத்தை நாம் ஆதரிப்பது சரியல்ல.

அடுத்து ஜகன் மோகினி ராகத்தில் 'தயஜூட' என்னும் கிருதியைப் பார்ப்போம்

ப ம கா ரி ஸ ஸ ம க ம பா

தயஜூட ஸமயமிதே — ஆரம்பத்தைக் கவனிக்கும் பொழுது சாஸ்திரிகள் இந்த ராகத்தின் ஆரோகணத்தை ஸ க ம ப நி ஸ என்று ஏற்றுக் கொண்டதாகத் தெரியவில்லை. மேலே கிருதியிலும் 'ஸகமப' என்று ஒரு தடவையாவது வரவில்லை ஸ க மக என்றுதான் அமைக்கப் பட்டிருக்கிறது. அதுவும் ஸ்வராக்ஷர அணியுடன் ஆரம்பித்திருக்கிறார். அனுபல்லவியில் தாரஸ்தாயி யிலும் 'ஜய மொஸகே சங்கரீ' என்ற இடத்திலும் ஸ்காரீஸ என்றும் ''ப்ரஹதம்ப''—என்னும் இடத்தில் ஸக-நிஸ ப நி ம ப என்று வைத்து, ஸ க ம பிரயோகத்தையே விலக்கி யிருப்பதாகக் தோன்றுகிறது,

பரசு, லலிதா முதலிய ராகங்களிலும் இதே ரீதியில் ஆரோகணத்தில் ஸமகம என்றே அமைந்து வருகிறது. முக்கியமாக, ஆரம்பிக்கும் முறையிலேயே இதை உணரலாம்

ஸ மா க மா ஸ மா க மா

'நீலாயதாக்ஷி' 'த்ரிலோகமாதா' — அவரோகணத்தில் பரசு ராகத்தில் பஞ்சமச் சேர்க்கையுடன் தைவதத்தின் பிடிகள் அமைந்து வருகின்றன.

லலிதா ராகத்தில் பஞ்சமம் வர்ஜமாகையால் தைவதம் அதன் ஸ்தானத்திலேயே காணப்படுகிறது. '' சால நின்னு—நெர '' என்று ஆதார ஷட்ஜத்திற்கு வந்த பிறகும்—''பக்த கல்பகலத'' என்பதை 'கா மா தா நீ த மா' என்று வராமல் ''ஸா நீ த நீ த மா'' என்ற அமைப்பைப் பார்க்கும் பொழுது 'ஸ ம க ம' என்பதே ஆரோகணத்திற்கு உசித மெனக் காணப்படுகிறது.

கர்நாடக காபி ராகத்தின் ஆரோகணம் ஸம்பூர்ணம் என்று சில ருடைய அபிப்பிராயம். சாஸ்த்ரிகள் ''அகிலாண்டேச்வரி'' என்னும் கிருதியில் 'ரீ மா பா நீ ரி ஸ ரி' என்று ஆரம்பிக்கிருர். அவரோகத்தில் ''துருஸுக'' என்று வரும் பொழுது ''நிநிபகா'' என்றே 'ஸநிதநிபதா' என்றே அமைந்திருக்கிறது. கர்நாடக காபி ராகம் உபாங்கம். ஆனல் அந்தர காந்தார அமைப்புடன் சரணத்தில் ''மாணிக்யமய'' என்னும் இடத்தில் ஸ்புரிதமாக 'மாமாம' என்று அமையும் பொழுது அந்தரகாந்தாரம் ஒலிப்பது இந்த ராகத்தில் அனுமதிக்கலாம் என்று என் குரு சொல்லியிருக்கிருர்.

கௌளிபந்து ராகத்தில் மத்யமம் சர்ச்சைக்கும் இடம் கொடுக்கும்- இதில் உருப்படிகளில் சில பகுதிகளை வாசிக்கிறேன்.

கருணாநிதியாகிய காமாக்ஷி—சரணங்கள். ஜன ரஞ்சனியில் 'நன்னுப்ரோவ ராதா'. ஒரு மத்யம கால கிருதி-சரணத்தில் விச்ராந்தியுடன் 'ச்யாம க்ருஷ்ண ஸஹோதரி''—இதன் அமைப்பிலேயே த்ரிபுட தாளத்திற்கும் சாபு தாளத்திற்கும் உள்ள இயற்கை வித்தியாசங்களைப் பார்க்கலாம்.

பொதுவாக சாஸ்திரிகளின் உருப்படிகளில் சங்கதிகள் கிடையா. அப்படி இருந்தாலும் கணக்குடன் இரண்டு மூன்று அமைந்து வரும். அய்யர்வாள் அர்த்த பாவத்தை வெளிப்படுத்திக் காட்டுவதற்கும், ராக வளர்ச்சியை Simple to complex என்ற முறையில் நிலைப்பதற்கும் அடுக் கடுக்கான சங்கதிகளை அமைத்துள்ளார், தீக்ஷிதர் ராக விஸ்தாரிப்பையே பிரதானமாக அமைத்து பல்லவியை ஒருவாறு அமைத்தால் அதற்கு ஏற்ற விச்ராந்தியுடன் அனுபல்லவியின் எடுப்பு முதலியவைகளை இயற்றி. இன்னும் சரணத்தில் ஒரு meticulous procedure உடன் ஒவ்வொரு கண்டிகையையும் ஒரு கட்டமாக வைத்து ராக கோபுரத்தை எழுப்பியிருக்கிருர். சாஸ்திரிகள் ஒரு ராகத்தை ஆரம்பித்தால், முடிக்கும் வரை நிறுத்த முடியாதபடி அந்த ராகத்தில் தோன்றும் அபிப்பிராயங்களை எல்லாம் சுழல் போல நிரப்பி அளிக்கிருர்.

சாஸ்திரிகளின் ஸ்வரஜதிகளின் ராகங்களைப்பற்றிப் பொதுவான சில அம்சங்களைச் சொல்ல விரும்புகிறேன். முதலாவது ஒரு ராக ஆலாபன பத்ததியை அறிந்து கொள்கிருேம். பல விதமான முக்தாயிகளுடன் எடுப்புக்களைப் பார்க்கிருேம். ராகவளர்ச்சியில் ஸஞ்சாரங்கள் ஒதுக்கல் செதுக்கல்களுடன் அமையும் பொழுதே ராகவடிவங்களின் சௌந்தரியத்தைக் காண்கிருேம். இன்னும் குறிப்பாகச் சொன்னல், மந்த்ர-ஸ்தாயி ஸஞ்சாரத்தின் முக்யத்துவத்தைப் பார்க்கிருேம். வாழ்க்கையில்

எவ்வாறு 'restraint' என்பதால் ஒரு ஸாத்வீக வழிபாட்டை நாம் பின் பற்ற முடியுமோ அவ்வாறே ஸங்கீதத்தில் இந்த மந்த்ரஸ்தாயி ஸாதகத்தினுல் ஓர் ஆழ்ந்த தன்மையை அடைகிறோம், வாய்ப்பாட்டானுலும் சரி, வாத்தியமானுலும் சரி இந்த பக்குவம் மந்த்ரஸ்தாயி அனுபவத்தினுல் ஏற்படுகிறது. மந்த்ர ஸ்தாயியில் ஆரம்பிக்கும் இந்த உண்மையை சாஸ்திரிகளின் மூன்று ஸ்வரஜதிகளிலும் காண்கிறோம். ராகத்தின் பூரிப்பை ஒவ்வொரு ஸ்வரப்பகுதியைச் சொல்லி சாகித்யங்களைச் சொல்லும் பொழுது ஸ்வரக்கோவைகளின் வித்தியாசங்களினுலும் உணர முடிகிறது.

ஸ்வரஜதியின் அமைப்பைப் பார்க்கும் பொழுது, அதாவது, ஒவ்வொரு ஸ்வரப்பகுதி, ஸாஹித்யப் பகுதியில் அமையும் பொழுது, ஒவ்வொரு ஸ்வரத்திற்கு ஓர் அக்ஷரம் வரும். நீண்ட எழுத்துக்களுக்குப் பெரும்பாலும் தீர்க்க - ஸ்வரங்களும், குறுகிய எழுத்துக்களுக்குக் குறில் ஸ்வரங்களும் அமைந்துவரும். இந்த அம்சத்தைப் பார்க்கும் பொழுது எவ்வாறு ராக விஸ்தாரிப்பில் ரஞ்சகம் ஏற்படுமென்ற ஸந்தேகம் தோன்றலாம். இசைக்குறை நேர்ந்து விடுமோ என்ற பயமும் உண்டாகும். ஆனுல், ஸ்வரஜதி என்ற உருப்படிக்கு உன்னத ஸ்தானம் அளித்த சியாமா சாஸ்திரிகள் ராக வளர்ச்சியை அடிப்படியாக வைத்து பக்தி பாவம் ததும்பும் பதங்களை லயபூரிதமான ஸ்வர அடுக்குகளில் குழைவு, நெளிவு பொருந்திய அமைப்புக்களில் இயற்றியிருப்பதால். இக்குறை அதாவது ஒரே அக்ஷரமயமான ஸாஹித்யத்தினுல் விளையக் கூடிய இசைக்குறை சிறிதேனும் காணப்படவில்லை.

ஸ்வரஜதியின் அமைப்பைச் சிறிய பிம்பமாக சாஸ்திரிகள் கிருதிகளில் ஸ்வர ஸாஹித்யம் என்ற ஒரு உப அங்கமாக அமைந்திருக்கிருர். இதில் அனுபல்லவியைத் தொடர்ந்து ஸ்வரப்பகுதியும், சரணத்தைத் தொடர்ந்து ஸாஹித்யப் பகுதியும் வரும். ராக வளர்ச்சிக்குச் சிகரமாக எவ்வாறு தீக்ஷிதர் தமது கிருதிகளில் மத்யம கால ஸாஹித்யங்களை இயற்றியுள்ளாரோ அவ்வாறே சாஸ்திரிகளின் ஸ்வரசாஹித்ய அமைப்புக்கள் ஒரு விருவிருப்புடன் ராக விஸ்தரிப்புக்கு ஒரு சிகரம்போல் அமைகின்றன.

நீமஹிமலு	...	...	நின்னே நம்மி (தோடி)
ஸரோஜநயன	...	...	துருஸுக (ஸாவேரி)
மாதவாதி	...	...	மாயம்மா (நாடகுறிஞ்சி)
நாமனவிவினு	...	...	காமாக்ஷி (வராளி)

சில கிருதிகளின் பகுதிகளிலும் இந்த ஸ்வர ஸாஹித்ய அமைப்பு காணப்படுகிறது. இது லயவின்யாஸ முறையில் அமைந்துள்ளது
ரீ ஸ் நி ப ம ஸ் நி ப ம ரி - நி ப ம ரி ஸ
நீ ப த மே நெரநம்மிதே
ப்ருஹந்நாயகி
(மத்யமாவதி) இதில் திச்ர மட்ய தாளத்தில் அமைந்துவரும். முதலில் 6 அக்ஷரம் தொடர்ந்து 2, 5. இதே அமைப்பில் மேலே இரண்டு சரணங்களும் மகுடம் வைப்பதென்ருல் இரண்டு முறை வைப்பதும் உண்டு, மூன்று முறைதான் இருக்க வேண்டு மென்ற அவசிய மில்லை என்பதை பல இடங்களில் சாஸ்திரிகள் காட்டியிருக்கிருர்.

லம சம்பந்தமான ஈடுபாடுகளில் சாஸ்திரிகள் ராகத்திற்கோ, ஸாஹித்யத்திற்கோ ஒரு பங்கமும், ஏற்படாமல் கையாண்டிருக்கும் முறையை நாம் ரசிக்கமேண்டும். லய வேலைப்பாடுகள் ராகபாவத்தில் பின்னிக்கிடக்கின்றன. ''ஏமனி'' - தோடி கிருதியில் கார்வைகளை கவனித்தோமானுல் ஆரம்பிக்கும்பொழுது ஷட்ஜத்தின் கார்வை மிச்ரம்; அடுத்த கார்வை கண்டம்; தொடர்ந்து ஆவர்த்தமான முடிவில் திச்ர மகுடம். அடுத்த ஆவர்த்தனத்தில் ஆரம்பகார்வை முன் வந்ததுபோல் மிச்ரம். கடைசியிலும் மிச்ரம். இவைகளல்லாம். பிகுவுடன் ராக பூர்த்தி யுடன் அமைப்பதால் தான் சாஸ்திரிகளின் உருப்படிகளில் ராகமும் தாள மும் ஐக்கிய பாவம் அடைவதைக் காண்கிருேம். ஒரு பதத்தை அதற்குத் தக்க ஜாதியில் அமைப்பதே சிகரமாக காணப்படுகிறது. ''பங்காரு காமாக்ஷி'' என்று பேகட கிருதியில் நி நி த - த த ப–ம க ம ரி என்றும் நீ த ப ம கா ம ரி வரும் சில இடங்களில் இந்த அக்ஷரங்கள் இரண்டு கண்டங்கள் அமையும். கல்யாணி வர்ணத்திலும் இந்த அமைப்பைப் பார்க்கலாம். (இதில் சில பகுதிகளை வாசிக்கிறேன்) இன்னும் ஓர் அம்சத்தை விளக்கி எனது உரையை முடித்துக் கொள்கிறேன். சாஸ் திரிகளின் சௌககால கிருதிகளில் ராகத்தில் காணப்படும் விச்ராந்தியை நாம் அனுபவிக்கிருேம்.

சங்கராபரணத்தில் ... ... சரணம் (தேவீ)
கா மா பா
பா லா ... ... நீவேகதியனி
சாலா ... ... திவ்யாம்பா
புன்னுக வராளியில்
''என்னேரமும்''—அனுபல்லவி
''சொந்த மைந்தன் நான் அல்லவோ''

குழந்தையுள்ளத்துடனும் உரிமையுடனும் அம்பிகையின் அருளை நாடி, ஸங்கீத அம்சங்களைப் பரிபூர்ணமாகக் கையாண்டு இசை வடிவங் களாகிய பொக்கிஷத்தை நமக்கு அளித்திருக்கிருர் சியாமா சாஸ் திரிகள்.

———

எனது குருநாதர்
வீணை கிருஷ்ணமாசாரியார்

G. CHENNAMMA

ஐம்பது ஆண்டுகளுக்கு முன், சங்கீதத்தின் மும்மணிகளாகத் திகழ்ந்தவர்கள், திரு. டைகர் வரதாசாரியார், திரு. கே. வி. ஸ்ரீநிவாச ஐயங்கார், திரு. வீணை கிருஷ்ணமாசாரியார் ஆகியோர் ஆவர். இவர்களுள் இளையவரான திரு. கிருஷ்ணமாசாரியார், எனது குருநாதரும், சிறந்த மேதையும் ஆவார். ஸ்ரீ ராமபிரானிடம் அளவிலா பக்தி கொண்டவர். பூர்வ பாப கர்மத்தினாலோ ஏனோ, சாதுவான இவரை நடக்கும் சக்தியற்றவராக ஆக்கிக் கடவுள் சோதித்து விட்டார். தம் கிருதிகளில் இவர் தம் மனத்திலுள்ள குறைகளைச் சொல்லிச் சொல்லி இறைவனிடம் வேண்டியதும் உண்டு. சில சமயங்களில் இகழ்ந்ததும் உண்டு. ''நாதா! நான் உன்னை எவ்வளவு வேண்டியும் நீ என்னைத் திரும்பிக்கூடப் பாராமல் இருக்கிறாயே? இது நீதியா? உன்னை தீனதயாளன் என்றும் கஜேந்திரனுக்கு ஓடிச்சென்று மோட்சம் கொடுத்தவன் என்றும் கூறுகிறார்களே? இவை யாவும் உண்மையா என்ற ஐயம் எனக்கு உண்டாகிறது. உலகத்தைக் காப்பவனாகிய நீ இவ்வாறு செய்யலாமா? பாரபட்சம் எதற்காக? என்று கதறியிருக்கிறார்.

நானூறுக்கும் மேற்பட்ட கிருதிகளை இயற்றியிருக்கும் இம்மேதை பிறந்தது தமிழ்நாடு. வாழ்ந்தது கர்நாடகம். இயற்றிய கிருதிகளோ தெலுங்கு நடையில். இது ஒரு விந்தையாகும். வீணை கிருஷ்ணமாசாரியார் என்றே அழைக்கப்பெற்ற இவர், வீணை வாசிப்பதில் வல்லவர். வாய்ப்பாட்டும் வீணையில் பேசும் கமகம் போன்றே கனரஞ்சகமாகப் பாடுவார். இதைத்தவிர நாகஸ்வரம், குழல், மிருதங்கம், டோல் முதலான வாத்தியங்களையும் நன்று கற்றுக் கையாண்டவர். நடன சாத்திரத்திலும் நிபுணர், இவருக்கு அநேக சீடர்கள் உண்டு. தம்முடைய சீடர்களுக்காகவே பிரத்தியேகமாக ஜதிஸ்வரங்கள், வர்ணங்கள், பதவர்ணம், மத்யம விளம்ப கால கிருதிகள், மணிப்ரவாள கீர்த்தனை, ஜாவளி, தில்லானாக்கள், தேவர் நாமம் இவைகளை ஏராளமாக இயற்றியிருக்கிறார். பத்மபுரி வரதா, வேமன்னா, பாண்டு ரங்கா, ரங்கா, திருவேங்கட வரதா, வசந்த புரீசா, சிதம்பர தில்லை நடராஜா, முதலியன இவரது அங்கிதங்கள். ஹிந்துஸ்தானி அசாவரி, ஹிந்துஸ்தானி பைரவி, பீலு, கேதார், தேஷ், ஹமீர், பாகேஸ்வரி, ஜோகியா ஆகிய ராகங்களை மிக அழகாகப் பயன்படுத்தியிருக்கிறார். கண்டம், மிச்ர, திச்ரசாபு, திச்ர நடை, திச்ர ஏகம், த்ரிதால் முதலிய தாளங்களை அதிகமாகக் கையாண்டிருக்கிறார். வீணை மேதையானதால் வீணையில் பேசும் அரிய நுட்பங்களைப் பாடியும் காட்டுவார். இவர் தெய்வத்தை சில சமயங்கள் இகழ்ந்து பாடியிருந்தாலும் மறு கணமே, ''உன்னை

விட்டால் எனக்கு கதியேது ? தாய் தன் சேயை மறக்கலாகுமா? என்னை உன் கடைக்கண்ணுல் பார்,'' என்று வேண்டி சரணடைந்திருக்கிருர். பால பாடத்திற்காக அநேக ரக்தி ராகங்களில் இவர் ஸ்வரஜதைகளைச் செய்துள்ளார். நான் இப்போது பாடும் கல்யாணி ராக ஸ்வரஜதை, முக்கியமாக வீணை கமகங்களுக்கும், நடனத்திற்கும் ஏற்றவாறு அமைந்துள்ளது, முப்பதிற்கும் மேற்பட்ட வர்ணங்களை இயற்றியிருக்கும் இவர் மிகப்பழமையான சம்பூர்ண சரணவழி முறையைக் கையாண்டிருக்கிருர். எத்துகடை ஸ்வரங்களைப் பாடி இறுதி ஸ்வரமான சம்பூர்ண சரணத்தை மூன்று ஆவர்த்தனமாகப் பாடி, சிட்டைஸ்வரத்தை மறுபடியும் பாடி, பல்லவி பாடும் பூர்வ சம்பிரதாயம் இப்பொழுது மறைந்து விட்டதே என்று வருத்தப்படுவார்.

பேகடை ராகத்தில் நிஷாதத்தை வர்ஜம் செய்து, 'ஸஸதப' பிரயோகத்தை வைத்தே ஒரு அடதாள வர்ணத்தை இயற்றியிருக்கிருர்.

சில காலம் மைசூரில் இருந்த இவரை அப்போது அரசாண்ட ஸ்ரீ கிருஷ்ண ராஜ உடையார் பெயரில் ஒரு கிருதி செய்யுமாறு ஒரு பிரமுகர் வேண்ட, தமக்கு அவ்வளவாக விருப்பம் இல்லாவிட்டாலும் கரஹரப்ரியா ராகத்தில் ஒரு பதவர்ணம் இயற்றினர். இதைக் கேட்டு மகிழ்ச்சியடைந்த மகாராஜா இவரை ஆஸ்தானத்தில் கச்சேரி செய்யுமாறு வேண்டினர். ஆனல் இவரது உடல் நிலை அதற்கு இடம் தரவில்லை.

கிருதிகளுள் இவர் செய்த முதல் கிருதி சாமா ராகத்தில்''கருணுகர' என்று துவங்கும் கிருதி. குழந்தைகட்கு சுலபமாக பாடம் செய்யும் முறையில் விநாயகதுதி, ஈஸ்வரதுதி, கிருஷ்ணதுதி, குருதுதி கிருதிகளை இயற்றினர். குறிப்பிட்ட சங்கதிகளை மட்டும் பிரயோகித்து, முக்கால் எடுப்பு, அரை எடுப்பு வைத்து, கண்டசாபு முதலான தாளங்களில் லய ஞானம் உண்டாகும் படி சில கிருதிகளை இயற்றியிருக்கிருர். உதாரணமாக கணுதிபதே, ஸதானந்த ஸ்வரூபா, ஆகியவற்றைக் கூறலாம்.

ஒரு சமயம் இவருக்கு உடல் நோய் அதிகமாக இருந்தபடியால் பூர்வி கல்யாணி ராகத்தில் ''இகனு நேநே மாத்ர மீகஷ்ட பட ஜால'' 'ஏ வேமன்ன ! என் கஷ்டத்தை நிவர்த்தி செய். இல்லாவிடில் உன் பாதார விந்தத்தில் என்னை ஏற்றுக்கொள்' என்று கதறியிருக்கிருர்.

நடபைரவி ராகத்தில் ஜன்யமாய் ஆரோகண அவரோகணத்தில் ரிஷபம் வர்ஜம் செய்து ஷாடவ ராகமாய், 'திவ்ய மாலதி' என்னும் ராகத்தைக் கண்டுபிடித்து ''பநுல மானி'' என்னும் கிருதியை இயற்றியுள்ளார்.

''நீ மனசு கரக தேடி'' என்னும் கதனகுதூகல ராகத்தின் கிருதியில் ''ஏ ராமா! நீயே மனிதனுய்ப் பிறந்து கர்ம பலன்களை அனுபவிக்கவில்லையா? மாயாவி ராவணன் சீதா பிராட்டியையே அபகரிக்கவில்லையா? ஜானகியையே இந்த விதி விடவில்லை என்ருல் நான் எம் மாத்திரம்? என்று தமக்குத்தாமே ஆறுதல் கூறிக் கொண்டிருக்கிருர்.

பெங்களூருக்கு அருகில் உள்ள ஸ்ரீ வல்லபராய ஸ்வாமியின் பெயரில், ''ஸ்ரீ வல்லபராய ஸ்ரீ வெங்கடேஸ்வரா'' என்னும் கிருதியைச் செய்து 'தீய சக்திகளைத் தடுத்து எங்களைக் காப்பாயாக' என்று கலியுகத்தின் கண்கண்ட தெய்வமான ஸ்ரீநிவாசனைப் பிரார்த்திக்கிருர்.

நாகஸ்வராளி ராகத்தில் மனத்தை உருக்கும் ஒரு கிருதியைச் செய்திருக்கிருர். தம் உடல் நோயைப்பற்றி மக்கள் பலவிதமாகப் பேசுவதைக் கேட்டு, ''ஏவேமன்னு! நானுக இந்த ஜென்மத்தைக் கேட்டேனு? நீயாக இந்த உடலை இப்படி அளித்து என்னைத் துன்புறுத்துவது அநியாயம் அல்லவா? உனக்கு நியாயம், அநியாயமே கிடையாதா? ''நேநுக நீ ஜென்ம மெத்தி வச்சிதி நேமி? நன்னிட்லு பாதிஞ் சுன்னதி ஏடி தெய்வமோ? '' என்று கேட்டிருக்கிருர்.

''பஞ்சாயுததர'' என்னும் சங்கராபரண ராக கிருதி ஒரு அப்பியாச கீர்த்தனமாய் விளங்குகிறது. இது சாரீராப்யாசம், தாளக்கட்டு, அகார சாதனை, கமகம் இவைகளைப் போதிக்கும் ஒரு தனிச் சிறப்புற்ற கிருதியாகும்.

ஹம்சத்வனி ராகத்தில் விளம்பகால கிருதிகள் காண்பது அரிது. குருநாதர் ''ராக்ஷஸ கானமு'' என்னும் விளம்பகால கிருதியில், 'மதுர கானம் செய்து பரமாத்மனைச் சேரவேண்டும்; வித்யா குரு சர்வ சிரேஷ்டனுக இருக்க வேண்டும்,' என்று பாடுகிருர்.

ஷண்முகப்ரியா ராகத்தின் ''நடசி நயோதிகி'' என்னும் கிருதி ஒரு வித்வத் பூர்ணமான லய கட்டுப்பாடுடைய கிருதி. 'கடலில் சேதுவைக் கட்டி சீதாபிராட்டியைக் காப்பாற்ற விரைந்தாயே! நான் இவ்வளவு வேண்டியும் காப்பாற்றத் தாமதமேன்?'' என்று வினவுகிருர்.

சத்காரியம் செய்தும் தம்மை இன்னும் காப்பாற்ற ராமன் வராத தால் மனம் நொந்து, தீயவர்கள் சந்தோஷமாக இருக்க, தர்மாத்மாக் கள் தரித்திர தேவதையைத் தழுவி இருக்கிறுர்களே ! இதன் மர்மம் என்ன? ''கர்ம ஸம்பவ மைன ஜன்ம மிதனி ஜனுலு ஸம்மதிஞ்சின மாடஸரியேமி வேமன்ஞ''? என்று தனது தோடி ராக கிருதியில் பாடி 'இதன் மர்மத்தைத் தெரிவிப்பாயாக', என்கிருர்,

''வேரெகதி லேதனி நின்னு நம்மி வேஸாரிதினய ஸ்ரீராமா'' என்னும் வசந்தராக கிருதியில் ''ஏ ராமா! நீ எத்தனை பெரியவனுனுலும் பேச வாயில்லாதவன். நான் கேட்கும் கேள்விகளுக்கு பதில் சொல்லத் தெரியாதவன். கடலில் எத்தனை நீர் இருந்தால் என்ன? பருக முடியுமா? மேலிருக்கும் மேகத்தை நம்பி உட்கார்ந்திருக்கும் பட்சியின் கதிதான் என் கதியும்'' என்கிருர்.

தாம் அசையக்கூட முடியாமல் இருந்த நிலையில் 'நடபைரவி' ராகத் தில் ''ஏ பாபமுனு சேஸிநந்துகை நாகிபுடு ஈபாடி ஜன்மமுனு இச்சிதிவோ ராமா'' என்று வேதனையடைந்து பாடியுள்ளார்.

சிலர், சங்கீதம் சோறு போடுமா? என்று இகழ்ந்து பேசிய போது ''சங்கீத வித்யகு ஸரியைனதியு நாம சங்கீர்த்த நம்பு நகு ஸமகீதியும் கலதே'' என்று பாடியிருக்கிருர்.

28ம் மேளம் ஹரி காம்போதியில் ஜன்யமாய், நிஷாதம் வர்ஜம் செய்து ஷாடவ ராகமாக ''சுத்த காம்போதி'' என்னும் ராகத்தைக் கண்டு பிடித்து ''இனகுலோத்தம'' என்னும் க்ருதியைப்பாடி இருக் கிருர். 'பாபாத்முல பாவன ஜேயு'' என்னும் சுத்த சாவேரி ராக கிருதி யில் ''ராமா! 'பாப ஆத்மாக்களை பாவனம் செய்பவன்' என்று உன்னைச் சொல்கிருர்களே! அப்படியென்ருல் என்னை பாபாத்மா என்றே ஏற்றுக் கொள்'' என்கிருர்.

28ம் மேளத்தில் ஜன்யமாய் பாஷாங்க ராகமாய் விளங்கும் ஹரிகே தார ராகத்தின் கிருதியில், (தன்னைக் கதியற்றவன் என்று பணிவிடை செய்பவர்கள் நினைத்துக் கூறியதைக் கேட்டுத் தவழ்ந்தே பூஜையறைக் குச் சென்று) மனம் வருந்திக் கதறுகிருர்.

த்வி அன்ய ஸ்வர பாஷாங்க ராகமாய் விளங்கும் சாயாலக கமாஸ் ராகத்தில், ''நேநே மபராதமு ஜேஸிதிரா'' என்னும் கிருதியை இயற்றி யிருக்கிருர். இதைப்பாடிய சந்தர்ப்பம் மிகவும் வருத்தம் தரக்கூடியதாக

இருந்நது. ஒரு முறை நாள் முழுவதும் இவர் நினைவில்லாமல் இருந்தார். அடுத்த நாள் அவரது சகோதரர் திரு. டைகர் வரதாசாரியார் வந்தபொழுது அவர் தமது சகோதரர் முன்னால் இந்த கிருதியைப் பாடினார். சகோதரர் தமது தம்பியின் நிலையைக் கண்டு மிகவும் கலங்கி விட்டார். இந்த கிருதியின் பொருள், 'ஏ பத்ம புரீசா! நான் என்ன தவறு செய்தேன் என்று இப்படி துன்பத்தின் மேல் துன்பம் கொடுக்கிறாய்? ஒன்றா இரண்டா! உனக்கு இரக்கமே கிடையாதா? இது தருமமா? உன் நாமத்தை எப்பொழுதும் உச்சரிக்கும் என் நா செய்த பாவமா அல்லது தவறா?'' என்பதாகும்.

கரஹரப்ரியா ராகத்தில் ''அஹிம்சா'' தத்துவத்தைப் புகுத்தி மற்றொரு கிருதியை செய்திருக்கிறார், ''உன் கோரோஜனை, கேசரி, மற்றும் நீ உடுத்தும் பீதாம்பரம், இவற்றிற்காக எத்தனை பசுக்களையும், கேசரி விலங்குகளையும், பட்டுப் புழுக்களையும் கொல்கிறார்கள். ஏ! திருப்பதி வேங்கடேசா! இது உனக்கு சரி என்று தோன்றுகிறதா?'' என்கிறார். மறுகணமே இப்படி தெய்வத்தை இகழலாமா என்று தோன்றி, ''எனது பாக்கியமே பாக்கியம்'' என்னும் தமிழ் கிருதியை அமீர் கல்யாணி ராகத்தில் இயற்றி, ''உன்னை நினைத்தாலே எனக்கு ஓர் ஆனந்தம் உண்டாகிறது. வானர சிரேஷ்டனுக்கும், தபஸ்விகளுக்கும், தினந்தோறும் பிரார்த்திக்கும் பக்தர்களுக்கும், வள்ளல்களுக்கும் கிடைக்காத வனமாலி பாண்டு ரங்கனின் அருளைப் பெற்றிருக்கும் எனது பாக்கியமே பாக்கியம்'' என்று கூறுகிறார்.

''ஸரயு நதியிலே'' என்னும் கேதார ராக கிருதியில் ''பரகதிக்காக நான் உன்னை அண்டினால் நீ என்னிடமிருந்து விலகி ஸரயு நதியில் ஐக்கியமானாயா?'' என்கிறார்.

மணிப்ரவாளத்தில் இயற்றியிருக்கும் ''ஆயா த்வாரகா நாதா,'' என்னும் கிருதி ஒரு பொக்கிஷம்.

ஐ.ஏ.எஸ். படித்துக் கொண்டிருந்த ஒருவன் பணத்திற்காக அழகற்ற பெண்ணொருத்தியை மணந்து, மிக அழகாக இருந்த படித்த பெண்ணை மணக்க மறுத்தான். அப்போது ஹிந்துஸ்தானி கேதார் ராகத்தில், ''வெதகி வெதகி தெச்சின நீ ரதி நெந்தனி வர்ணிந்துரா,'' என்று ஒரு ஜாவளியைப் பாடினார்.

திரு. சி. ராஜகோபாலாசாரியார் பெங்களூர் வந்த சமயத்தில், ''ரா ரா ஸ்ரீ ராஜகோபாலஸ்வாமி'' என்னும் ஜாவளியை இயற்றினர்.

சிலர் குருநாதரிடம் சங்கீத விஷயமாய் வாக்கு வாதம் செய்ய வருவர். அவர்கள் எல்லா ஜாவளிகளையும் பெண்ணை மையமாகக் கொண்டே ஏன் இயற்றியிருக்கிறீர்கள்''என்று கேட்க ''இந்து வதன'' என்னும் பூப் கல்யாண் ராக ஜாவளியை அக்கணமே இயற்றி, எங் களுக்குப் பாடமும் செய்வித்தார்.

மிகவும் ஆசாரமாயிருந்த ஒரு சிஷ்யையின் மாமியார், அவளைக் காலையிலிருந்து பட்டினி போட்டு வேலைகளை யெல்லாம் செய்ய வைத்து, வீணைப் பாடத்திற்கு அனுப்புவாள். அவளுக்கு குருநாதர் பழமும் தேனீரும் அளிப்பார். அவள் நிலையை நினைத்து, மோகன ராகத்தில், ''இதி ஏடி ஈதி பாதலே ஓ செலியரோ, ஈ மகனிதோ நீ லாகெந்த காலம் கடபுதுநே'' என்று ஒரு ஜாவளியைப் பாடியிருக்கிறுர்.

சனிக்கிழமைகளில் குருநாதரின் பள்ளியான, 'ஆர்ய கான வித்யா லயத்திற்கு' விடுமுறை. ஆனுல் சில சீடர்களுக்கு மட்டும் விசேஷ பாடங் களைக் கற்பிப்பார். அன்று ஒரு நாள் நாங்கள் சென்றிருந்தோம். குரு நாதரின் அறை பூட்டியிருந்தது. சமையல் செய்பவனைக் காணவில்லை. சமையலறைக் குள்ளிருந்து துயரமான குரலொன்று கேட்டது. நாங்கள் பயந்து கொண்டே கதவைத் திறக்க, குருநாதர் கண்களில் நீர் வழிய, ''ஆரித்த ரேனு எனகே, நீ நல்லதே வேமன்ஞ'' என்று ஹிந்துஸ் தானி அசாவரி ராகத்தில் ஒரு தேவர் நாமத்தை மனமுருகப் பாடிக் கொண்டிருந்தார். 104° காய்ச்சல். தம் நினைவே இல்லாமல் பாடிக் கொண்டிருந்தார். டாக்டரை அழைத்து வந்து அவருக்கு மருத்துவ உதவி அளிக்கச் செய்தோம். அவர் பாடிய அந்தப் பாடலை நாங்கள் அப்படியே எழுதிக் கொண்டோம். டைகர் அவர்கள் வந்து தம்பியின் இந்நிலையைக் கண்டு, அவரை அணைத்துக்கொண்டு கலங்கினர். ''கண்ணு! உன் உடல்நிலை இவ்வளவு மோசமாக இருக்கிறதே. எனக்கு தந்தி கொடுக்கக் கூடாதா? உன் வயிற்றில் உள்ள வித்தையை எல்லாம் உனக்கு பிரியமான சீடர்களுக்கு சொல்லிக்கொடு. என் பாணியை இது வரை யாரும் பின்பற்றவில்லை. உன் செயல் மகத்துவம் வாய்ந்தது. ஜன்ஜூடி ஒரு தம்பிடி ராகம். அதில் எத்தகைய ஒரு சஞ்சாரபாவத்தை நீ புகட்டியிருக்கிறுய்? நீ ஒரு மேதை!'' என்று புகழ்ந்து, ''இந்த நயம் எனக்கு வராது. உன் மனம் மிகவும் மிருதுவானது. கடவுள் உன்னை மிகவும் சோதிக்கிறுர், கடவுளே ! உன் லீலையைப் பாமரர்

களால் அறிந்து கொள்ள இயலாது,'' என்ருர். தன் கையால் தம்பியைத் தழுவி அவருக்கு மருந்து கொடுத்தார். அப்பொழுது குருநாதர், ''அண்ணு ! இந்த வலி எனக்குப் பொறுக்கவில்லே. உன் கையால் கொஞ்சம் நஞ்சு கொடுத்தாயாஞல் புண்ணியமுண்டு. நான் இந்த நோயிலிருந்து நிரந்தரமாக விடுபட்டு விடுவேன்,'' என்ருர். இதைக் கேட்ட டைகர் அவர்கள் உள்ளுக்குள் துயரமடைந்தாலும் வெளியில் சிரித்து ' உனக்கென்ன பைத்தியமா ? இவ்வாறு கடவுளே நினேக்கும் ஞானம் உனக்கு இருப்பதை நீ மறந்து விட்டாயா ? உனக்கு மறுபிறவியே இல்லே. இவ்வாறு இனியொரு முறை நீ பேசுவது முறையல்ல,'' என்று சொல்லி குருநாதரை நன்கு பார்த்துக் கொள்ளுமாறு எங்களுக்குக் கட்டளேயிட்டுவிட்டு சென்னேக்குப் புறப்பட்டுச் சென்ருர்:

குருநாதர் சில தில்லாஞக்களேயும் ஒரு தராஞவையும் இயற்றியிருக்கிருர். இவ்வாறு சாதுவும், மேதையும், பக்தருமான எனது குருநாதரின் கிருதிகளேப்பாடியும் அதை விவரித்தும் சொல்ல எனக்கு வாய்ப்பளித்த சென்னே மியூசிக் அகாடமி அங்கத்தினர்களுக்கு நான் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

—X—

BOOK REVIEWS

UTTUKADU VENKATA SUBBAYYAR'S NAVAVARANA KIRTANAS: With a biography in English by Prof. K. R. Rajagopalan and text and notation in Tamil script By Nidamangalam Krishnamurti Bhagavatar. Department of Statistics, Madras Christian College, Tambaram, Madras 600 059. Price not indicated.

— *(◦)* —

This is a cyclostyled compilation of eleven Navāvarana kirtanas in Sanskrit of Uttukadu Venkata Subbayyar with notation prepared by Nidamangalam Krishnamurti Bhagavatar. The correct date of the Uttukadu composer is not known but he is stated to have lived during the time of ruler Pratāpasimha of Tanjore (regnal years 1739-1763 A.D.) He is not mentioned either in the 'Karunāmrita Sāgaram' of Abraham Panditar or in the 'Sangita Sampradāya Pradarsini' of Subbarāma Dikshitar. Dr. Gift Siromoney has rightly pointed out in his foreword that 'either the composer was not well-known at the beginning of this century or some of the songs attributed to him could belong to other composers of the same name'. Strangely enough, the tenth song in the series commences with the words 'Guru guha jananī'.

Venkatasubbayar's songs in Sanskrit and Tamil have now become fairly well-known mainly through the efforts of his sixth generation descendent Nīdāmangalam Krishnamūrti Bhāgavatar. He and other members of the family gave demonstrations of these songs at the Music Academy in 1955, 1960 and 1963. Prominent musicians, who were present there, were unanimous in their opinion that the *sāhitya* and the musical setting of the songs were excellent. Some of the kirtanas are in rare ragas like Amara Kalyāni, Velāvali, Deepara, Kannada Māruva and Kuntalasri, including one in the Pann Puranirmai; the ten talas employed include a rare one, Sankīrna Mathya. Most of the kirtanas are on Krishna and are replete with Sollukattu passages which are a part of the dancer's

repertoire. Krishnamurti Bhagavatar is stated to have preserved the musical score of the kirtanas in an unusual linear wave-like notation two samples of which are given in the book.

The eleven āvarana kirtanas printed with notation include a dhyāna sloka and a phalasruti or benediction, all in praise of the Devi who is worshipped in the different chakras. The names of the Yoginis are mentioned in the appropriate places. These show that the Uttukādu composer was, in addition to being a devotee of Krishna, a follower of the Srī Vidyā cult.

Prof. Rajagopalan has produced an interesting biography of the composer from the scanty material available and has modestly pointed out that his analysis of the musical quality of the compositions was bound to be 'superficial' and a more critical appraisal of them from various angles could be done only when all the pieces and their musical setting became available. He has, however taken the first step by publishing in the book under review an analytical list of all the 289 songs attributed to Uttukādu Venkata Subbayyar. The book is an excellent introduction to the rich material that awaits further research. Srī Krishnamurti Bhāgavatar has also contributed a brief foreword in Tamil.

(*:—:(*):—:*)

COMPOSITIONS OF SRI SADASIVA BRAHMENDRA: Set to music by Sangita Kalanidhi Semmangudi R. Srinivasier. Published by the Semmangudi Srinivasier Golden Jublee Trust, Madras. Price Rs. 6.

It may not be correct to describe Sadāsiva Brahmēndra as a music composer (vaggēyakāra) in the strict sense of the word but the 23 Sanskrit kirtanas composed by him are lyrics of unsurpassed beauty. Later composers like Tyāgarāja were fascinated by the simple beauty of Brahmēndra's words. Tyāgarāja has not only composed a kriti starting with the words 'Mānasasancharare' but his kriti 'Nadachi nadachi' is based on the song 'Khēlati mama hridayē' of Brahmēndra. Its anupallavi 'Pudamisutā

sahāyudai chelangē pūrnuni ātmārāmuni guda' is obviously inspired by the charana 'Sānti Vidēhasutā sahachāri - daharāyodhyā nagara vihāri' in Brahmēndra's kriti.

Sadāsiva Brahmēndra, who was disciple of Srī Paramasivēndra Sarasvati, the 57th pontiff of the Kānchi Kāmakoti Math, is a name to conjure with in the field of Advaita and he is the author of many classics like the 'Atma vidyā vilāsa'. His songs have an important place in the Bhajana sampradāya of South India. Vidwan Semmangudi Srīnivāsier was one of the earliest to popularize the kirtanas of Brahmēndra by singing them in his concerts and I have heard him sing 'Mānasa sancharare' and 'Bruhi Mukundēti' more than fifty years ago. Inspired by a saint called Varahur Periyaval, he learnt the pieces from Vidwans and for some songs he himself set the 'varnamettus'.

The Srīnivāsier Golden Jubilee Trust has done well in publishing the present book with the sāhitya in Dēvanāgari and Tamil scripts and a simple notation. The book, which includes an English biography of Sadāsiva Brahmēndra, is elegantly printed and will be of great help to musicians and music students.

T. S. PARTHASARATHY

—:*=(*)=*:—

Statement about ownership and other particulars regarding

THE JOURNAL
OF
THE MUSIC ACADEMY
MADRAS

FORM IV

(See Rule 8)

Place of Publication	...	The Music Academy Madras-14.
Periodicity of its publication	...	Once a year
Printer's Name	...	V. T. Rajan
Nationality	...	Indian
Address	...	Rajan & Co., (Printers),
	...	1, Goomes Street, Madras-1.
Publisher's Name	—	T. S. Parthasarathy
Nationality	—	Indian
Address	—	306, Mowbray's Road, Madras-14.
Editor's Name	—	T. S. Parthasarathy
Nationality	—	Indian
Address	—	306, Mowbray's Road, Madras-14.
Names and addresses of individuals who own the newspaper and partners or shareholders holding more than one per cent of the total capital.	}	The Music Academy 306, Mowbray's Road, Madras-14.

I, T. S. Parthasarathy, hereby declare that the particulars given are true to the best of my knowledge and belief.

Dated, 15th August, 1980.

(Sd.) T. S. Parthasarathy
(Signature of the Publisher)

ORDER FORM

To

The Editor/Manager,
The Journal of the Music Academy,
306, Mowbray's Road,
Royapettah,
Madras-600 014 (S. India)

Dear Sir,

Please enter/renew my subscription for Vol. No. L (1979). I send Rs.....................(India) / U. S. $ .... (Foreign) towards the subscription plus Rs.....................(India)/ U. S. $..................................(Foreign) towards Postal Registration charges etc. by Sea Mail/Air Mail by P.O./M.O./Cheque.

Name...

Address.....................................

....

....

....

Station :

Signature

Date :

GIFT ORDER

Please enter my Gift subscription for the supply of Vol. No. L (1979) and send the Journal of the Music Academy by Registered Post, to the following address :
I send Rs.................(India) U. S. $........................(Foreign) plus towards Postal Registration charges etc. Rs........................ (India)/U.S. $......................by Sea Mail / Air Mail............... (Foreign)

Name.................................

Address..............................

....

....

Station : Signature

Date :

Full Name..

Address...

Publications of the Music Academy

		Rs.	P.
Sangita Sampradaya Pradarsini - in Tamil Script Vols. 1, 2, & 3	each	15	00
Vol. 4		22	50
Raganidhi : B. Subba Rao, English. Vol. II		12	00
Vol. III		15	00
Vol. IV		19	00
Prahlada Charitra Kirtanas of Melattur Venkatarama Sastri with Notation in Tamil, 1965		6	00
Rare Compositions of Patnam Subrahmanya Iyer Tamil 1971		9	00
Some Rare and Unpublished Kirtanas of Mysore Sadasiva Rao, Tamil, Sanskrit and English, 1970		6	00
Songs of Mysore Sadasiva Rao with Notation in Tamil		6	00
Garbhapuri Kirtanas with Notation in Tamil, 1968		6	00
Mazhavai Chidambara Bharati's Songs with Notation in Tamil, 1965		6	00
Kritis of Pallavi Seshayyar with Notation in Tamil, 1968		18	00
Four Rare Compositions of Veena Subbanna of Mysore with Notation in Tamil 1965		6	00
Compositions of Pazhani Subramania Bhagavatar with Notation in Tamil 1965		6	00
Abhinaya Navanita (Dance) Tamil, 1961		3	00
Abhinaya Sara Samputa (Dance) Tamil, 1961		6	00
Nottu Svara Sahityas of Sri Muthuswamy Dikshitar with Sanskrit text and Notation in Tamil, 1977		4	50
Tyagaraja Album . Tamil & English, 1967		1	50
Index of the Articles on Music and Dance in Souvenirs of the Academy's Annual Conferences from the beginning - English		3	00
Journal of the Music Academy : Volumes available Vol. XXXVI (1965) to Vol. XXXVIII (1967) Vol. XLVI (1975) to Vol. XLVIII (1977)	India - each	12	00
	Foreign Dollars - 3 each		
Souvenir of 1967, 1971 to 1975, 1977	- each	2	00
,, 1979		4	00
Souvenir of 1962 and 1965 with Coloured plates of five Composers	- each	3	00

(Postage and forwarding charges extra)